**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 237 of 2020**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : அஜித்குமார்** | **Father/Husband's Name : குணசேகரன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 09.03.2026.**

**Accused present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மடத்துக்குளம் சோழமாதேவியில் குடியிருந்து தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 23.02.2020ம் தேதி மதியம் 3.30 மணியளவில் உடுமலைபேட்டை – பழனி மெயின்ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி எனது தந்தை குணசேகரன் அவரது நான்கு சக்கர வாகனமான TN 09 AP 3690 என்ற வாகனத்தில் தாழையம் அருகே உள்ள தென்னந்தோப்பை குத்தகைக்கு பேசுவதற்காக வந்தபோது விஸ்கோஸ் காளீஸ்வரன் மில் அருகே வந்தபோது கிழக்கிருந்து மேற்கு நோக்கி வந்த ஜீப் வண்டி எண் KL 52 E 4342 என்ற வாகனம் எனது தந்தையார் ஓட்டி வந்த Maruti 800 வலது பக்கம் திரும்பி தோப்பிற்கு இன்டிகேட்டர் சமிக்ஞைகள் செய்து கொண்டு சென்றபோது கிழக்கில் இருந்து வந்த ஜீப் வேகமாக Horn அடிக்காமலும் வந்து Maruti 800 மீது மோதியதில் எனது அப்பாவிற்கு அவரது இடது மூட்டு, வயிறு, நெஞ்சில் அடிப்பட்டவாறு மயங்கினார். நான் அவருக்கு பின்னால் 100 மீட்டர் இடைவெளியில் எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். மேற்படி விபத்தை நான் நேரில் பார்த்தேன். மேற்படி நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய நபரின் பெயர் வினோத் என கேட்டு தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரி தான் மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். பின்னர் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் உதவியுடன் பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். அங்கு மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு ஏற்கனவே எனது அப்பா

குணசேகரன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். பின்னர் பிணவறையில் எனது அப்பாவை வைத்துவிட்டு காவல் நிலையம் சென்று விபத்தை ஏற்படுத்திய ஆஜர் எதிரி மீது புகார் அளித்துவிட்டு வீட்டிற்கு தகவல் சொன்னேன். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. புகாரை யார் எங்கு வைத்து எழுதினார் என்றால் நான் தான் காவல் நிலையத்தில் வைத்து எழுதிக் கொடுத்தேன். நான் புகார் கொடுக்கும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு 8.30 மணி இருக்கும். எனது அப்பா தென்னை குத்தகை பேசுவது தொடர்பாக சென்றார் என்று சொல்லியுள்ளதில் எங்கு யாரை பார்க்க சென்றார் என்றால் தாழையம் என்ற ஊரில் உள்ள குமாரசாமி என்பவரை பார்க்க சென்றார். மேற்படி குத்தகை சம்மந்தமாக பேசுவதற்கு செல்வதாக என்னிடம் எங்கு வைத்து சொன்னார் என்றால் வீட்டில் பேசி கொண்டிருந்தபோது சொன்னார். எத்தனை மணிக்கு பேசும்போது அவ்வாறு சொன்னார் என்றால் மதியம் 2.30 – 3.00 மணி இருக்கும். அப்போது எனது அப்பா மட்டும் தான் போனாரா, வேறு யாரும் அவருடன் போனாரா என்று தெரியுமா என்றால் என் அப்பா மட்டும் தான் போனார். நான் பழனிக்கு வேலை விசயமாக வந்ததாக சொல்லியுள்ளதில் எத்தனை மணிக்கு எங்கிருந்து எங்கே செல்வதற்கு கிளம்பினேன் என்றால் மதியம் 3.15 மணிக்கு வீட்டில் இருந்து பழனிக்கு கிளம்பினேன். நான் பழனிக்கு வந்து யாரை பார்த்தேன் என்றால் நான் பழனிக்கு வருவதற்கு முன்பே விபத்தாகிவிட்டது. பழனிக்கு எந்த வாகனத்தில் வந்தேன் என்று புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொன்னேனா என்றால் சொல்லவில்லை பல்சர் வண்டியில் வந்தேன். எனது வீட்டில் இருந்து சம்பவம் நடந்த இடத்திற்கு வருவதற்கு எவ்வளவு தூரம் இருக்கிறது என்றாலும் எவ்வளவு நேரம் ஆகும் என்றாலும் 7 கி.மீ. தூரம் இருக்கிறது, 20 – 30 நிமிடம் ஆகும். எனது அப்பா வீட்டில் இருந்து 2.30 மணிக்கு கிளம்பினார் என்றால் இல்லை, 2.30 மணிக்கு பேசி கொண்டிருந்தோம் 3.00 மணிக்கு கிளம்பினார். விபத்து நடந்ததாக சொல்லும் சாலை பழனி – உடுமலைபேட்டை பிரதான சாலை என்றால் சரிதான். அந்த பிரதான சாலை நான்கு சக்கர வாகனங்கள், இரண்டு சக்கர வாகனங்கள் அதிகமாக செல்லும் சாலை என்றால் சரிதான். எனது அப்பா இயக்கி வந்த வாகனம் உடுமலைபேட்டை – பழனி சாலையில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். எதிரியானவர்

ஓட்டி வந்ததாக சொல்லும் வாகனம் பழனியில் இருந்து உடுமலைபேட்டை நோக்கி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி ஓட்டி வந்த வாகனம் என்றால் சரிதான்.

3. விபத்தானது பழனி – உடுமலைபேட்டை சாலையில் கிழக்கில் இருந்து மேற்காக செல்லும் போது இடதுபுறம் உள்ள சாலை பகுதியில் நடந்தது என்று புகாரிலும், வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வரும்போது வலது புறம் திரும்பும் போது விபத்து ஏற்பட்டது என்று புகாரிலும், வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வரும்போது சாலையின் இடது பக்கத்தில் இருந்து சாலையின் வலது பக்கத்திற்கு வருவதற்கு சாலையின் நடுவே திறப்பு எதுவும் இருந்ததா என்றால் இல்லை. எதிரியானவர் சரியான பாதையில் வந்து கொண்டிருந்தார் என்றாலும் எனது அப்பா கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த எதிரியின் வாகனத்தை பார்க்காமல் வந்து வலது பக்கம் திருப்பி எனது அப்பாவின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. விபத்து இழப்பீடு வழக்கு போட்டு இழப்பீடு பெற்று கொண்டோம் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. எனது அப்பா வாகனத்திற்கும், எனது வாகனத்திற்கும் இடையில் வேறு வாகனம் சென்று கொண்டிருந்ததா என்றால் ஆமாம். என்ன வாகனம் சென்று கொண்டிருந்தது என்றால் லாரி வாகனம் சென்று கொண்டிருந்தது. அந்த லாரிக்கு முன்பு வாகனம் எதுவும் சென்று திரும்பியதை என்னால் நேரடியாக பார்க்க முடியாது என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் அவ்வாறு சம்பவயிடத்தில் இருந்திருந்தால் நான் எனது வாகனத்திலேயே எனது அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்திருப்பேன் என்றாலும் சரியல்ல. எதிரியின் பெயர், முகவரி விபரங்கள் போலிசார் சொல்லி தான் நான் புகார் மனுவில் எழுதினேன் என்றால் சரிதான். எதிரி வந்த வாகனத்தின் பதிவெண் விபரம் போலிசார் சொல்லி தான் புகார் மனுவில் எழுதினேன் என்றால் சரிதான். எதிரி வாகனத்தை சரியான திசையில், சரியான வேகத்தில், சரியான பாதையில் சென்று கொண்டிருந்தார் என்றாலும் எனது தந்தை தான் கவனக்குறைவாக வந்து விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. நான் நேரில் விபத்தை பார்க்காமல் போலிசார் சொன்னதை வைத்து பொய்யனா புகார் மனு

**கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.**

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.09 18:06:58 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 237 of 2020**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : கோநாகா** | **Father/Husband's Name : திருமலைச்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 09.03.2026.**

**Accused present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனி நேதாஜி நகரில் குடியிருந்து Civil Engineer ஆக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தப்பா மகன் ஆவார். இறந்துபோன குணசேகரன் எனது சித்தப்பா. கடந்த 23.02.2020ம் தேதி மதியம் 3.30 மணியளவில் எனது அம்மா நான் வெளியில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனது சித்தப்பா குணசேகரன் என்பவருக்கு விபத்து ஏற்பட்டது எனவும், அவரை பழனி அரசு மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு வந்திருப்பதாகவும் எனக்கு தகவல் சொன்னார்கள். நான் வந்து பார்த்தபோது அவர் இறந்துபோன தகவலை கேள்விபட்டேன். போலிசார் என்னை அரசு மருத்துவமனையில் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.09 18:07:06 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 237 of 2020**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : கதிர்வேல்** | **Father/Husband's Name : செல்லப்பன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 09.03.2026.**

**Accused present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனி தெற்கு புதூரில் குடியிருந்து பந்தல் அமைக்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது தாய்மாமன் மகன் ஆவார். இறந்துபோன குணசேகரன் எனது தாய்மாமன். தேதி, மாதம் ஞாபகமில்லை 2020ம் வருடம் மதியம் 3.30 மணியளவில் நான் வேலை செய்துவிட்டு வந்து கொண்டிருந்தபோது எனது தாய்மாமனுக்கு விபத்து ஏற்பட்டது என தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவர் இறந்ததாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.09 18:07:12 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 237 of 2020**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : மனோகரன்** | **Father/Husband's Name : பொன்னுச்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 09.03.2026.**

**Accused present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சோழமா தேவியில் குடியிருந்து தேங்காய் உரிக்கும் தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன குணசேகரன் எனது சித்தப்பா மகன். அ.சா.1 குணசேகரனின் மகன். தேதி, மாதம் ஞாபகமில்லை 2020ம் வருடம் மதியம் 3.30 மணியளவில் நான் வேலை செய்துவிட்டு வந்து கொண்டிருந்தபோது எனது சித்தப்பா மகன் குணசேகரனுக்கு விபத்து ஏற்பட்டது என தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவர் இறந்ததாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.09 18:07:18 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 237 of 2020**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : குணசேகரன்** | **Father/Husband's Name : காளிமுத்து** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 09.03.2026.**

**Accused present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சோழமா தேவியில் குடியிருந்து தேங்காய் உரிக்கும் தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன குணசேகரன் எனது தாய்மாமன். அ.சா.1 தாய்மாமன் மகன். தேதி, மாதம் ஞாபகமில்லை 2020ம் வருடம் மதியம் 3.30 மணியளவில் நான் வேலை செய்துவிட்டு வந்து கொண்டிருந்தபோது எனது தாய்மாமன் குணசேகரனுக்கு விபத்து ஏற்பட்டது என தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவர் இறந்ததாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.09 18:07:25 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 237 of 2020**

**Deposition of Witness P.W.6**

| | |
|---|---|
| **Name : கருப்புச்சாமி** | **Father/Husband's Name : ஆறுமுகம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 09.03.2026.**

**Accused present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது சோழமா தேவியில் குடியிருந்து தேங்காய் உரிக்கும் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 23.02.2020ம் தேதி இரவு 8.30 மணியளவில் தாழையத்திற்கு மேற்கு புறம் மில் அருகே நானும், பரமசிவம் என்பவரும் நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், பரமசிவம் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் விபத்தை நடந்த இடத்தை படம் வரைந்து சாட்சி கையொப்பம் பெற்றார்கள். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. நான் போலிசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையொப்பம் எங்கே வைத்து செய்தேன் என்றால் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். இறந்துபோன நபர் உறவினர் என்பதால் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றாலும் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.09 18:10:19 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 237 of 2020**

**Deposition of Witness P.W.7**

| | |
|---|---|
| **Name : பரமசிவம்** | **Father/Husband's Name : காளியப்பன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 09.03.2026.**

**Accused present.**

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது சோழமா தேவியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். தேதி, மாதம் ஞாபகமில்லை கடந்த 5 – 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு வேலை முடித்துவிட்டு விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்து கொண்டிருந்தபோது போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், கருப்புசாமி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் விபத்தை நடந்த இடத்தை படம் வரைந்து சாட்சி கையொப்பம் பெற்றார்கள். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

**2. நான் போலிசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். பின்பு சாட்சி Police Stationல் வைத்து கையொப்பம் செய்யவில்லை, இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்று சொன்னார். இறந்துபோன நபர் உறவினர் என்பதால் காவல்**

**நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.09 18:10:26 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**